**செய்தி வெளியீடு எண்:198** **நாள்: 11.04.2017**

**<u>செய்தி வெளியீடு</u>**

**<u>“குடும்ப தொழில் மேலாண்மை”</u>**

தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம், (www.editn.in) (தமிழ்நாடு அரசின் தன்னாட்சி சங்கம்) கிண்டி சிட்கோ தொழிற்பேட்டையில் இயங்கி வருகிறது. தமிழ்நாடு அரசு 2013–2014 ஆம் ஆண்டில் தொழில் முனைவோரை ஊக்குவிப்பதற்காக புதிய திட்டமான புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (NEEDS) அறிவித்தது. இத்திட்டத்தில் தமிழ்நாடு முழுவதும் 2606 பயனாளிகள் பயன் அடைந்துள்ளனர். மேலும் பிரதமரின் சுய வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP) மற்றும் வேலையில்லா இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP) ஆகியவற்றின் வாயிலாகவும் பல்லாயிரம் தொழில்கள் துவங்கப்பட்டுள்ளன. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் 2013ல் அறிவித்துள்ள NEEDS திட்டம் வழியாக, முதல் தலைமுறை தொழில் முனைவோர் பயன்பெற்று வருகின்றனர்.

தற்பொழுது குடும்ப தொழில் / வியாபாரம் நடத்திக் கொண்டிருக்கும் தொழில் முனைவோர்களுக்கு உதவி செய்யும் பொருட்டு, அவர்கள் குடும்ப தொழில் நடத்தும் முறை பற்றி மேற்கொண்டு தெரிந்து பயன் அடைய, தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் வரும் ஏப்ரல் மாதம் 26.04.2017லிருந்து 28.04.2017 வரை மாலை 3 மணி முதல் 6 மணி வரை மூன்று நாட்கள் பயிற்சி, தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம், கிண்டி சிட்கோ தொழிற்பேட்டை, பார்த்தசாரதி கோயில் தெரு, ஈக்காட்டுத்தாங்கல், சென்னை – 600 032 (EDII Campus) நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இப்பயிற்சியின் முக்கிய நோக்கம் குடும்பதொழிலின் மேலாண்மை விரிவாக்கம், வெற்றிகரமாக நடத்தும்முறை, சட்ட வரைமுறைகள் குறிப்பாக HUF மற்றும் வரி விதிமுறைகள் பற்றி கற்றுக்கொடுக்கப்படும். தற்பொழுது குடும்ப தொழில் முனைவோர்கள் (ஒரு குடும்பத்திலிருந்து தொழிலில் உள்ள இருவர்) இப்பயிற்சியில் கலந்து கொண்டு பயன்பெறலாம். இப்பயிற்சிக்கு சேருவோர் பதிவுத்தொகை ரூ.500/– கட்டவேண்டும். விருப்பம் உள்ளவர்கள் உடனடியாக தங்கள் பெயரை தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்தின் இணையதளம் (www.editn.in) (அ) அலுவலகத்திலோ நேரில் வந்து பதிவு செய்து கொள்ளவும். மேலும் தகவலுக்கு பயிற்சி ஒருங்கிணைப்பாளர், தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் மின்னஞ்சல்: TC4@editn.in தொலைபேசி எண்: 22252081 / 22252082, (வேலை நாட்களில் காலை 10.00 முதல் மாலை 6.00 மணி வரை) என்ற எண்ணில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டு கொள்கிறோம்.

கூடுதல் தலைமை செயலாளர் / இயக்குநர்

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**